RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s713

OPEN ACCESS

# மூன்றாம் உலகப்போர் நாவலில் சூழலியல் விழுமியங்கள்

## ம. இராஜகுமாரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, சீதாலெட்சுமி இராமசுவாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002, தமிழ்நாடு, இந்தியா.

# Environment Aspects in Moondraam Ulagappor Novel

## M. Rajakumari [a, *]

[a] Department of Tamil, Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli-620002, Tamil Nadu, India

* Corresponding Author:
rajakumarisrc@gmail.com

Received: 19-12-2021
Revised: 17-04-2022
Accepted: 28-04-2022
Published: 13-07-2022

Check for updates

**ABSTRACT**

"Moondram Ulaga Por" is a novel written by the Great Poet Vairamuthu on Global warming and its threats. It was chosen as the best novel among the World Tamil novels by Dutto Sri Soma Trust and was awarded a cash prize of 10,000 American Dollars. The novel throws light on the ill effects of population explosion, materialism, modernism, excessive use of automobiles which pollutes the environment. Karuthamayee, Ishimoora, Chinnapandi and Emily are the main characters of the novel. Karuthamaayee is introduced as a proud farmer and he is depicted as a familiar character from our neighbourhood. Chinnapaandi is an efficient young man who has been graduated in Agriculture. He inspires the youngsters of his village with his knowledge and vigour. The writer tries to implore the readers by emphasizing on the fact that discipline and environmental sustainability are possible only if there is change individual's behaviour. The writer produces statistical evidences thereby creating awareness to the selfish society. This article focuses on the eco-critical reading of the novel as environmental sustainability is the need of the hour and more over it is the social responsibility of each and every individual.

**Keywords:** Moondram Ulaga Por, Vairamuthu, Behaviour, Social Responsibility

## முன்னுரை

காலந்தோறும் ஆற்றங்கரையோரங்கள் மனிதவாழ்வில் பல வளர்ச்சி நிலைகள் சார்ந்த பயிற்றுணர்வுகளைக் கற்றுத்தந்திருக்கின்றன. மனித நாகரிகத்தின் தொட்டிலே ஆறுகளும், அதனை ஒட்டிய நிலப்பரப்புகளுமே என்பதனை ஆய்வாளர்கள் உடன்படவே செய்கின்றனர். இடம்பெயர்ந்து நிலையில்லா வாழ்வு வாழ்ந்த மனிதனை மீட்டெடுத்து இருத்தல் எனும் மிக உன்னதமான நிலைக்கு உய்வித்தது நிலப்பரப்புகளில் மனிதன் மேற்கொண்ட உழவும் தொழிலுமே ஆகும். அங்ஙனமாகிய தன்னைச் சார்ந்த நிலப்பரப்பு மற்றும் சூழலியலோடு பின்னிப்பிணைந்து வாழ்ந்தவற்றுள் மனிதன் மட்டுமல்லாது உயிரினத் தொகுதிகளும் அடங்கும். நம்மை வாழ்விக்கும் சூழலைக் காத்து மேம்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு ஆட்படக்காரணம் மனிதன் கடைபிடித்த நுகர்வுக் கலாச்சாரமே ஆகும். சுருங்கச் சொல்வதானால் “தீதும் நன்றும் பிறர்தர வாரா” எனும் வரிகள் மனித செயல்பாடுகளுக்கு மிகவும் பொருந்தும்.

## ஆய்வுப் பொருண்மை

சுற்றுப்புறச் சூழலைக் காக்கவேண்டி, காலந்தோறும் பல்வேறு வழியில் அறிஞர்களும் சான்றோர்களும் கவிஞர்களும் கூறியவண்ணம் இருந்திருக்கின்றனர். அவ்வகையில் விருதுபெற்ற

புதினமாகிய மூன்றாம் உலகப்போர் எனும் கவிப்பேரரசு வைரமுத்து அவாகளின் படைப்பில் இலங்குகின்ற சூழலியல் விழுமியங்களை விவாதிப்பதே இக்கட்டுரையின் ஆய்வுப் பொருண்மையாக எடுத்தாளப்பட்டுள்ளது.

## ஆய்வுக்கருதுகோள்

பிரச்சனைகள் வேண்டுமானால் பெரிதாகத் தோன்றலாம். ஆனால் அவற்றிற்கான தீர்வுகள் என்னவோ மிகச்சிறிதாகத் தான் இருக்கும். அதை அடைகின்ற வழி வன்மையானதாகத் தோன்றும். எனினும் கரைகடந்தேறுவது இன்றைய கட்டாயத் தேவை எனும் போது மனமாற்றம் மட்டுமே கைகொடுக்கும். எனவே, தனித மனித ஒழுக்க மேம்பாடு வழி சூற்றுப்புறச் சூழலைக் காக்கவும் புவி வெப்ப மயமாதலைத் தடுக்கவும் ஓரளவேனும் சீர்படுத்தவும் முடியும் என்பது இவ்வாய்வின் கருதுக்கோளாக அமைந்திருக்கின்றது.

## மூன்றாம் உலகப்போர்

சிறந்த திரையிசைப்பாடல்களுக்காக நான்குமுறை தேசிய விருது பெற்றவரும், கள்ளிக்காட்டு இதிகாசம் நாவலுக்காக சாகித்திய அகாதமி விருது பெற்றவரும் மிகச்சிறந்த கவிஞரும் ஆகிய கவிப்பேரரசு வைரமுத்து அவாகள், புவி வெப்பமாதல் குறித்து எழுதிய மூன்றாம் உலகப்போர் புதினம் மலேசியா டான்ஸ்ரீ சோமா அறக்கட்டளையால் உலகத்தமிழில் வெளியான சிறந்த நாவல் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு பத்தாயிரம் அமெரிக்க டாலர் பரிசுத்தொகையும் பெற்ற சிறப்புக்குரியது. இந்நாவலுள் காணலாகும் சூழலியல் விழுமியங்கள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

## பாத்திரங்கள்

கருத்தமாயி எனும் பெயர்கொண்ட மனிதரைக் கதைப்பாத்திரம் என்று சொல்வதைவிடவும் போகிறபோக்கில் நம்முள் வாழ்ந்து மரணிக்கின்றன நினைவாகவே கருதவேண்டும். ஒருவாசகனுக்குள் கருத்தமாயி ஒரு பிரமாண்டமாக பரிணமிக்கிறார்.

“சும்மா செக்குல ஆட்டுன எண்ணெய் எடுத்துச் சிவலிங்கத்துக்குப் பூசுன மாதிரி தேக்கங்கட்ட மாதி திரேகம்” (Vairamuthu, 2012).

உடல்நலமுடன் வாழ்ந்து மண்ணுக்கும் விண்ணுக்கும் பாதகம் இன்றி மண்ணைக் கிண்டுகின்ற வர்க்கத்தில் வாழ்ந்த கருத்தமாயி நம் பாட்டனையும் புட்டனையும் நினைவுக்குக் கொண்டுவருகின்றார். அட்டவணைப்படி வாழ்கின்ற நம்மவர்க்கு அட்டணம்பட்டியார் கருத்தமாயி படிக்காத பழுத்த அனுபவத்துடன் சொல்கின்ற வார்த்தைகள் தொண்டைக்குழியில் இறங்கும் பருக்கை சோற்றுக்கான படிப்பினையைக் கற்றுக்கொடுக்கிறது.

கருத்தமாயி, சிட்டம்மா, சின்னபாண்டி, எமிலி, இஷிமூரா என ஐவரும் கொண்டு கதை நகர்கின்றது. நம்மையும் சேர்த்தே நகர்த்துகிறார்கள்.

## சுற்றுப்புறச் சூழல்

மனிதனைச் சுற்றிலும் அமைந்து காணப்படுகின்ற இடங்களும் பொருட்களும் சுற்றுப்புறச் சூழல் என்று கருதப்படுகின்றது. அதாவது,

“ஓர் உயிரியைச் சுற்றியுள்ள ஒட்டுமொத்த அமைப்பு என்றும் அது காற்று, ஒளி, மண், வெப்பம், நீர் மற்றும் அவற்றோடு தொடாபுடைய மற்ற உயிரினங்களையும் அந்த உயினங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டைக் கட்டுப்படுத்தும் காரணிகளையும் உள்ளடக்கியது” (Kumarasamy, 2011).

எனும் கருத்து நோக்குதற்குரியது. இச்சுற்றுப்புறச் சூழலே நம் வாழ்வியலுக்கான ஆதாரங்களைக் கொடுக்கின்றது. காலந்தோறும் பல்வேறு மாற்றங்களைப் பெற்றிடினும் மண்ணுயிர்களை வாழ்விக்கும் செவ்விய பணியிலிருந்து சூழல் விலகியதில்லை. மனிதன் தன் செயல்களால் சூழலியல் மாற்றங்கள் பெருத்த விளைவுகளை எதிர்கொள்ள வேண்யிருக்கிறது என்ற கருத்தை மையமிட்டு இப்புதினம் அமைந்திருக்கின்றது.

## சூழலியலியல் மீதான எண்ணங்கள்

நம் வீடு சுத்தமானால் போதும், நமக்கு விளைச்சல் கூடினால் போதும், ஒருநாள் தானே நெகிழிப்பை, குப்பையை எரித்தால் என்னவாகிவிடுமாம் இதுபோன்ற மிகச் சாதாரணமான அஜாக்கிரதையான எண்ணங்கள் மக்கள் மனதில் தோன்றுவது பெருகிவிட்டது. விளைவு, புயலுக்குப் பெயர் வைக்க ஓர் அகராதியும், ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்த குழந்தையைக் காப்பாற்ற ஓர் அதிசயக்கருவி, வாங்கின காய்கறியில் அடிக்கப்பட்ட பூசப்பட்ட பூச்சிக்கொல்லிமருந்துகளைக் கழுவிட நீர், வெள்ளநீர்ப்பெருக்கில் இருந்து தப்பிக்க சாதுர்யமாக மேல்மாடி வீடு என்று மனிதனின் புத்திசாலித்தனம் வியப்புக்குரியதாக அமைந்துவிட்டது என்பது புதுமையில்லை. மனிதனுக்குப் புரியாமல் போன செய்தி இயக்கம் குறைந்து இயந்திரமயமான மனிதவுலகம் நுகர்வுக்கலாச்சாரம் எனும் எதிர்காலம் அல்ல எதிர்ப்பான காலத்திற்குப் பயணிக்கின்றோம் என்பது. எனவே,

வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னா

வைத்தூறு போலக் கெடும் - குறள்

எனும் குறள்கூறும் நெறிபோல பின்வரும் காலங்களில் மனிதன் தன் வாழ்வையும் வாழ்விடங்களையும் காத்துக்கொள்ள இன்றே விழித்துக்கொள்ள வேண்டும். அதனையே இந்த மூன்றாம் உலகப்போர் புதினம் எடுத்துரைக்கின்றது.

## கருத்தமாயும் மண்ணும்

விவசாயம் உலகினைக் காக்கும் குலதெய்வம் என்று நம்பும் நல்ல மனிதர். மண்ணோடு கருத்தமாயிக்கு உள்ள உறவு உடலுக்கும் உயிருக்குமான உறவு. ஒன்றில்லையேல் மற்றில்லை. மண்ணின் நிறம் பார்த்து மணம் முகர்ந்து அதன் தரம் சொல்லும் அனுபவம் கொண்ட ஆள்.

“எல்லோரும் எதுக்கப்பா செத்த பேச்சாப் பேசுறீங்க? பொழைக்கிற பேச்சப் பேசுங்கப்பா. விடிஞ்சா எந்திரிப்போம்னு நம்பித்தானப்பா பாயப்போட்டுப் படுக்கப் போறோம். இன்னைக்கில்லேன்னாலும் என்னைக்காவது ஒரு நாள் வெளையாமப் போகுமா? சாமி சண்டைக்காரனாப் போனாலும் பூமி கைவிடாதப்பா” (Vairamuthu, 2012).

என்று சொல்வதன்மூலம் உழவின் மீது அவர்கொண்ட நேசம் நன்றாகப் புலப்படுகின்றது. உழவின் மேன்மையினை எடுத்துச் சொல்லவேண்டிய கட்டாய நிலைக்கு இவ்வுலகம் ஆட்படக் காரணம் என்ன? விவசாயம் குறித்த திரைப்படங்கள், புதினங்கள், கதை, கவிதை, கட்டுரை, நாடகம், மேடைமுழக்கம், பத்திரிகை துண்டு பிரசுரம் என எல்லாம் உழவை முன்னிருத்தி ஆக்கப்படக் காரணம் மனிதனின் உணவுத்தேவை குறைந்துவிட்டதா என்ன? இல்லையே, பசியால் வாடும் நாடுகள் என்று பட்டியல் ஏன் ஏற்பட்டது? மனிதர்களை வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் என்று வகுப்பு எவ்வாறு உருவானது? கேட்க பல கேள்விகள் இருக்கின்றன. இவ்வனைத்துக் கேள்விகளுக்கும் பதில் உழவு மறக்கடிக்கப்பட்டதே. அதை உணர்த்தவே சின்னப்பாண்டி முற்படுகின்றான்.

## உலகமயமாக்கல்

ஒவ்வொருநாடும் தங்கள் அனைத்துவிதமான தேவைகளுக்கும் ஒன்றை ஒன்று சார்ந்தே இருக்கின்றன.

"உலக மயமாக்கலினால் தொழில் உற்பத்தி, வாணிபப் பெருக்கம், அங்காடிவிரிவு, நுகர்வு அதிகரிப்பு, நாகரிக வளர்ச்சியின் மிகைமிஞ்சிய போக்கு, அயல்நாட்டு மோகம் ஆகியவை அதிகரித்துக்கொண்டே செல்லுகின்றன. எனவே, சுற்றுப்புறச் சூழலில் உள்ள பொருட்கள் மிக அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுச் சுரண்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றன." (Krishnamoorthy, 2004).

எனும் சிந்தனைக்கு ஏற்ப உலக நாடுகள் அனைத்தும் சூழலியல் சிதைவுக்குப் பொறுப்பேற்றே தீரவேண்டும். மிகச்சில நாடுகள் தம் தொழில் முன்னேற்றத்திற்கு வளம் நிறைந்த வளரும் நாடுகளின் கனிம வளங்களைச் சுரண்டுவதும், அதிக கழிவுகளை வெளியேற்றும் மிகப்பெரிய அளவில் நீர் ஆதாரங்களை உறிஞ்சுகின்ற தொழிற்சாலைகளை வளரும் நாடுகளில் அமைப்பதும், பணி வாய்ப்பைப் பெருக்குகின்றோம் என்ற பெயரில் தகவல் தொழிநுட்ப உபகரணங்களைப் பெருக்கி மின்கழிவுகளை மிகுவிப்பதும் என சார்புப் பொருளாதாரம் உயர்ந்து சூழல் அமைப்பு சிதையத் தொடங்கியது. இதனை, மூன்றாம் உலகப்போர் புதினத்தில் ஆசிரியர் படைத்த மிக முக்கியமான வளர்ந்த நாட்டில் இருந்து படைக்கப்பட்ட எமிலி என்ன பெண் கதைப்பாத்திரத்தின் வழியே வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல கருத்துரைக்கின்றார். அதாவது,

"இனியேனும் மூன்றாம் உலக நாடுகளின் வானத்தில் வைத்த வாளையும் கழுத்தில் வைத்த கத்தியையும் வளர்ந்த நாடுகள் அகற்றிவிட வேண்டும். ஒவ்வொரு மனிதனும் உலகச்சங்கிலியில் ஒரு கண்ணி என்று எண்ணிப் பார்க்க வேண்டும்" (Vairamuthu, 2012).

என்று கூறுவதன்மூலம் உலக நாடுகளுக்கு வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் மீது காட்டவேண்டிய அக்கரையினை எடுத்துச் சொல்கிறார் ஆசிரியர்.

## பூகோள அமைப்பில் இந்தியா

இயற்கை வளங்கள் நிறைந்த நாடு, இறையியல் வாழ்வு, ஒழுக்க வாழ்வு, பலதரப்பட்ட பருவச்சூழல் என எல்லா வளங்களும் நிறைந்த நாடு. "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே" எனப் பாரதி சொல்வது போல் பாரத தேசம் கடல், நதி, ஆறு என நீர் நிலைகள் நிறைந்த பொருளாதாரத் தன்னிறைவு கொண்ட மிகச்சிறந்த நாடு என்பதனை, நாவலாசிரியர், நம் பெருமையை நாமே கூறினால் தம்பட்டம் அடிப்பது போலாகுமோ என எண்ணி இஷிமூரா என்ற சப்பானிய துறவியை அறிமுகம் செய்து அவர் வழியாகப் பகர்கின்றார்.

"எல்லோர்க்கும் பிடிக்கும் இந்தியா, எங்களுக்கு இன்னும் அதிகமாக. எரிமலைக் குழம்புகள் எச்சில் துப்பாத தேசம். பூகம்பத்தால் அடிக்கடி பூகோளம் மாறாத தேசம். அடிக்கடி கடல் எழுந்து வந்து பூமி குடிக்காத தேசம். ஓய்ந்து போகாத உழைப்பாளிகளின் தேசம். எல்லாவற்றுக்கும் மேலாய் புத்தர் பிறந்த புண்ணிய தேசம். கவிதையாய் பேசினேன்" (Vairamuthu, 2012).

என்று இஷிமூரா சொல்வதன் மூலமாக உலக நாடுகள் மனதில் இந்தியா மீதான எண்ணங்களைப் பிரதிபலிக்கிறார் ஆசிரியர். பூகோள அமைப்பிலும் பருவக் காலச் சூழலியல் அமைப்பிலும் தட்ப வெப்பத்திலும் தனக்கென சிறப்பம்சம் கொண்ட நாடு இந்தியா என்பது இதன்மூலம் விளங்குகின்றது.

## தனிமனிதத் தேவைப்பெருக்கம்

தேடல்களே புரட்சியின் தொடக்கமாக இருந்தது என்பது எக்காலத்துக்கும் பொருந்தும் கருத்துரையே. எனில் தன் சுய தேவைக்கு என சுற்றுச்சூழலியல் அமைப்புக்கு தீங்கு விளைப்பது எவ்வகையில் நியாயம்? தலைநகர் தில்லி புகை மாசினால் சிக்கித்தவிக்கக் காரணம், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு வருகை தந்த பறவைகள் குறைந்து போனதற்குக் காரணம், கேழ்வரகு, கம்பு போன்ற பாரம்பரிய உணவுகள் தெருவில் விற்கப்படக் காரணம், பீட்சாவும், பர்க்கரும் வீட்டு

அடுக்களையில் புகுந்ததற்குக் காரணம், என எல்லாவற்றுக்கும் சுயநலம் தலை தூக்கியதன் விளைவு தான்.

"வாழ்நாளில் 66,000 லிட்டா தண்ணீர் குடித்தான், ஆயுளில் மூன்றில் ஒருபங்கு தூங்கினான், நான்குகோடி முறை இமைத்தான், நாலரை லட்சம் டன் இரத்தத்தை இதயத்தால் இறைக்கவைத்தான், 35 ஆயிரம் கிலோ உணவு அதாவது எடையில் இந்திய யானைகள் ஏழு தின்றான், மரித்துப் போனான். இதற்குத் தானா மனிதப் பிறவி?"

இப்படியாக வாழ்ந்து மடிந்து போகின்ற மனித வாழ்வில் பாரம்பரிய வாழ்வாதாரம் எனச் சொல்லப்படும் விவசாயம் பற்றி கவலைப்பட அரசுகளும் தலைமைகளும் முன்னெடுக்கவே மறந்தன. தனக்கும் மூன்று வேளை பசிக்கும் என்பதையே மறந்தனர். ஆடிப்பட்டம் தேடி விதைத்து தையில் கதிறுத்து களமாடிய பயிர்க்கலை குறுகியகால பயிர்களாக மாறியது. மரபு மாற்றப்பட்ட பயிர்கள், அவர்கள் கொடுக்கும் விதைகள், அவர்கள் கொடுக்கும் உரங்கள், மும்முறை விஷ மருந்துகள் என வரையறுக்கப் பட்டுவிட்ட வணிகம் சார் விவசாயத்துக்கு இந்திய மண்ணும் மண்வளமும் பழகிவிட்டதோ எனும் அளவிற்கு ஆகிவிட்டது சாபக்கேடாகவே தோன்றுகின்றது. இக்கருத்தை,

"விவசாயம் இந்தியாவில் லாபகரமானதாகவும் இல்லை, கௌரவமானதாகவும் இல்லை. விவசாய இழப்பைத் தேசிய இழப்பாகக் கருத வேண்டும். இடைத்தரகர்களின் இலாபம் உற்பத்தியாளர்களைச் சேர வேண்டும். படித்த பட்டதாரிகள் விவசாயத்தில் புகுந்து அதை நவீனப்படுத்தினால்தான் கவலைக் கிடமான விவசாயம் கௌரவம் பெறும். ஆண்டுக்கு 41 ஆயிரம் மருத்துவர்களையும் 9 லட்சம் பொறியாளர்களையும் உண்டாக்கும் இந்தியா எத்தனை வேளாண்மைப் பட்டதாரிகளை உருவாக்கி விவசாய வெளிகளில் விட்டிருக்கிறது?" (Vairamuthu, 2012)

என்ற கருத்தின் மூலம் இந்திய கல்வியியல் அமைப்பு மாணவர்களை உருவாக்குவது இல்லை, அதற்கு மாறாக உற்பத்தி செய்கின்றது என்பது புலப்படுகின்றது.

## புவி வெப்பமயமாதல்

"பெத்தபுள்ளை கைவுட்டாலும் வச்சபுள்ள கைவுடாது" என்பது சொலவடை. ஆயினும் யதார்த்த உண்மை. மரங்களால் பூமியை நிரப்பினால் ஒழிய புவி வெப்பமயமாதலில் இருந்து விடுபட இயலாது என்பது மெய். ஆர்டிக் உருகுகின்றது, அண்டார்டிகாவும் உருகுகின்றது என்று சொன்னபோது ஏற்பாடத கலக்கம் கடல் நீர்மட்டம் உயர்கின்றது என்றபோது ஏற்படாத கலக்கம் ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்ற நீண்டவரிசையில் தனக்கு இடம் இல்லாத போது ஏற்படுகின்றது. கோழி முட்டையிடும்போது அடைபடுப்பதற்கு முன்பே முதல்நாள் விட்ட முட்டை கரு கூடியிருப்பதற்கான காரணம் புறப்பரப்பில் நிலவுகின்ற அதீத வெப்பம் என்று ஆராயப்பட்டுள்ளது. மஞ்சள் நிறக் குமிழ் விளக்குகள் மூலம் அதிக வெப்பம் பரவுகின்றது என்பதும் வியப்புக்குரிய எச்சரிக்கைமணி அடிக்கப்படுகின்றது.

"கிரீன்லாந்தின் ஐஸ்லாந்து இன்னும் நூறு ஆண்டுகளில் முற்றும் உருகி முடிந்துவிடும் என்கிறார்கள். அதனால், அரைமீட்டர் உயருமாம் கடல்மட்டம். கங்கையை உண்டாக்கும் இமயப்பனி உருகிமுடிக்க இருபத்தைந்தே ஆண்டுகள் போதுமாம். இயற்கைக்கு எதிராய்த் தொடுக்கும் போரில் மனிதன் அழியப் போகின்றான். எல்லாம் புவி வெப்பமயமாதலின் அபாய அறிகுறி" (Vairamuthu, 2012)

என்று எமிலி எனும் அமெரிக்கக் கதாப்பாத்திரத்தின் வழியாகக் கூறி உலகியலின் நடப்பியலை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

## மரம் வளர்ப்பு

வேம்பினை மாரி என்பதும், தென்னையைப் பிள்ளை என்பதும், வசம்பினைப் பேர் சொல்லாதது என்பதும் தமிழர் வழக்கம். பிள்ளை பிறந்து இறந்து போனால் அக்குழந்தையை அடக்கம் செய்த இடத்தில் கருவேப்பிலை கன்று நடுவதும் வட்டார வழக்காகவே இருந்து வந்திருக்கின்றது.

அவ்வகையில் கருத்தமாயி தன் தாய் தந்தைக்காகவும் இருவேறு மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதும் அம்மரங்களைப பராமரிப்பதும் என செய்துவருகிறார். ஒவ்வொரு நாளும் அம்மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றுகின்றபோதெல்லாம் அருள் இறங்கி சாமி ஆடுவது போல தன் தாய்க்கும் தனக்குமான பிணைப்போடு பேசுகின்றார். அத்தோடு அமையாது வேறு தேசத்தவரான இஷிமூராவின் தாய் தந்தையர்க்காகவும் மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பது மிகவும் சுவாரஸ்யமாக அமைந்திருக்கின்றது.

நெடுஞ்சாலைக்காக மரங்களை வெட்டுவதும் அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருக்கும் ஒருவனுக்கு இலவச மரக்கன்று கொடுப்பதும் குளத்து நீர் ஆவியாவதைத் தடுக்க வினோத முயற்சி செய்யும் விஞ்ஞானிகள் பெருகிவிட்ட சூழல் இந்தியாவில் தான் உள்ளது.

விதைப்பந்து முயற்சியை முன்னெடுத்துள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பனை விதை நடுகின்ற சூழலியல் அமைப்புகள் எல்லாம் பாராட்டும் செயல்பாடுகளைச் செய்து வந்தாலும் விளைவுகள் நிலைத்த பயன்களைத் தருகின்றனவா என்பதனைக் கண்காணித்திட வேண்டும். மரங்கள் நடுவதன் நன்மைகளை எடுத்துரைக்க வேண்டும். மாறிவரும் பருவச் சூழலில் நீர்வளம் என்பது சமூகத்தில் பற்றாக்குறையாகவே இருந்து வருகின்றது. முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளால் நீர் ஆதாரங்களைப் பராமரித்து மனித வாழ்வை வளமாக்கிடவும் எதிர்காலச் சந்ததிகளுக்குப் பயன்படும் வகையில் மழைநீர் சேகரிப்பு ஆதாரங்களைத் தூய்மைப்படுத்திடவும் வீடுகளிலும் மழைநீர் சேமிப்பை நடைமுறைப்படுத்த வேண்டும். நீர் வீணாவதைத் தடுத்தல், நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல் திறமையான முறையில் நீர் பங்கீடு செய்தல் போன்றவை அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளாகும். நாட்டின் பொருளாதாரம் சமுதாய வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு எனப் பல்வேறு வகைகளிலும் நீர்வளப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் உள்ளது. இத்தகைய நீர்வளப் பாதுகாப்பிற்கு மரம் வளர்ப்பு மிக இன்றியமையாதது என்பதனை ஆசிரியர் வெகுவான இடங்களில் எடுத்துச் சொல்கின்றார்.

## இயற்கை விவசாய முறை

இயற்கை முறை விவசாயத்தைத் தவிர்த்து செயற்கைமுறை விவசாயத்தினை முன்னெடுத்த விவசாயிகள் முதலில் விளைச்சல் அதிகமாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக கண்டகண்ட மருந்துகளையும் உரங்களையும் இடுகின்றனர். இதனால் விளைச்சல் மகசூல் கூடுகின்றது. ஆயினும் காலப்போக்கில் மண்மலடு தன்மை கொண்டதாக மாறிவிடுகின்றது. மண்புழுக்களும் தட்டான்களும் இல்லாத விவசாயம் விளங்காது போய்விடும். கலைக்கொல்லி என்ற ஒன்றைக் கண்டறிந்து மனிதன் தன் தலையிலே தானே மண்ணள்ளி போட்டுக்கொண்டான்.

“வாழை போட்டா குழை நோய் தாக்குது. கரும்பு போட்டா செந்தாழை அடிக்குது. தென்னைய நட்டா மண்டைப் புழுவு விழுந்து குருத்து அழிஞ்சு போகுது. செவட்டை அடிச்சா செத்தே போகுது தக்காளி. கத்தரி, வெண்டை நட்டா கத்தாழை சீக்கு. சக்கரவள்ளிக் கிழங்கு நட்டா அரக்கு அடிக்குது. காம்பழுகல் நோய் வந்து மொண்ணையாய் போயிருது மொளகாச் செடி. கணக்குப் போட்டுப் பாத்தா விதைச் செலவுக்கு வந்து சேரல வெள்ளாமை” (Vairamuthu, 2012)

மேற்கண்ட இன்னல்களுக்குக் காரணம் என்ன? மனிதன் தன் சுயம்சார் செயல்களால் விவசாயமும் சூழலியல் மண்டலமும் பாதிக்கப்பட்டு பெருத்த மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டது. இதனை உணர்ந்து செயல்பட்டால் வருங்கால தலைமுறை நோய் நொடியில்லாத வளமான சமுதாயமாக விளங்கும்.

## அடிப்படை மனமாற்றம்

செவ்வாயில் ஜீவராசி உண்டா என்று விஞ்ஞானம் தேடல் கொள்கின்ற காலம். 24 மணிநேரம் கழித்தும் இறந்தவரின் இதயத்தைப் பொருத்தி உயிர்ப்பிக்கும் விந்தை மருத்துவம். குப்பையில் மின்சாரம், இரண்டே நிமிடங்களில் நூடுல்ஸ் போல எல்லாம் துரிதம் என்றான இவ்வுலகின் கண்கள் பார்க்காத மறுபக்கம் இருக்கவே செய்கின்றது. அதிகாலை துயிலெழுந்து முன்முகம் காட்டி வரவேற்ற

நதிகளும் ஆறுகளும் இன்று பின்முகம் நோக்கியே வரவேற்கப்படுகின்றன. மக்களின் வரிப்பணத்தில் பெருந்தொகை சுகாதாரத்திற்கே செலவிடப்படுகின்றன என்பது நகைப்புக்குரிய உண்மை. ரோட்டோர மலம் கழிப்பு தவிர்ப்பு குறித்து மத்திய மாநில அரசுகளின் முன்னெடுப்புகள் சரியான வெற்றியைத் தரவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகத் தோன்றுகின்றது.

சின்னப்பாண்டி இதைத்தவிர்க்க சாலையின் இருபுறங்களிலும் குழல் விளக்குகளை எரியவிட்டு பிரகாசப்படுத்துகின்றான். குப்பைகளைத் தானே வீடுவீடாகச் சென்று சேகரிக்கின்றான். புதுமையைக் கைக்கொள்ளும் எந்த ஒரு சாதனையாளர்களும் அவமானத்திற்கு உள்ளாகியதாகத்தான் வரலாறு கற்பித்திருக்கின்றது. "தட்டுல தங்கம் கலந்து வச்சாலும் பவுனாவா பால் பீச்சும் பசுமாடு," என்று ஏசும்போதெல்லாம் இஷிமூராவும் எமிலியும் உடனிருந்து தேற்றுகின்றனர். "விதையின் கிழிசல் என்பது அழிவல்ல, முளைப்பின் முதல் முயற்சி", "அடுப்பில் வைத்த பாத்திரம் அஞ்சக் கூடாது நெருப்புக்கு" "கழிவுறுப்புக்குப் பக்கத்தில் கரு வளருவதைப் போல தீமைக்குப் பக்கத்தில்தான் சமூகம் வளர்ந்து வந்திருக்கிறது", கன்னத்தில் கிள்ளி சொல்லிக் கொடுப்பது வெற்றி, கன்னத்தில் அடித்துச் சொல்லிக் கொடுப்பது தோல்வி" பொதுப்பணிக்கு வருகின்றவனுக்கு அவமானம் தான் முதல் வெகுமானம், இவற்றையெல்லாம் கடந்து களம் காணும் சின்னப்பாண்டி வலுவிழந்து போன நம்பிக்கைக்கு உயிர் கொடுக்கின்றான. இப்படியொரு பிள்ளையைப் பெற்ற பாக்கியம் கருத்தமாயிக்குக் கிடைக்கும் போது,

"ஈன்றபொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய் - குறள்

எனும் குறட்பா நினைவில் வருவது அழகான பொருத்தமாகவே படுகின்றது. சேகரித்த குப்பைகளை சூழலியல் அமைப்புக்குத் தீங்கு விளைவிக்காத வகையில் சின்னப்பாண்டி மேற்கொண்ட ஊட்டமேற்றிய தொழுவுரம் தயாரிக்கும் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

"இந்த உலகின் எரியும் பிரச்சினைகளுக்கு மத்தியில் எரிக்கமுடியாத பிரச்சினை குப்பை. வானத்தில் குப்பை கொட்டுகின்றன வளர்ந்த நாடுகள், பூமியில் குப்பை பொட்டுகின்றன வளரும் நாடுகள், தினக்கழிவுகளையும் திடக்கழிவுகளையும் ஜீரணிக்க முடியாமல் பூமியின் வயிறு புடைக்கிறது. வானக்கழிவுகளால் காற்று தொடும் தூரம் அழுக்காகப் போகிறது" (Vairamuthu, 2012)

இது போன்ற பிரச்சனைகள் தோற்றத்தில் மலையளவு தோன்றிடினும் விளைவு நன்மையையே தரும் என்ற அவாவினால் உருவானதே சின்னப்பாண்டியின் மனமாற்றம். அம்மாற்றம் நம்முள்ளும் தோன்றின் அழகான தோட்டமாக ஒவ்வொரு ஊரும் நாடும் நகரமும் மாறும் என்பதில் ஐயமில்லை.

## முடிவுரை

நீங்காத மாண்பு கொண்ட இந்திய திருநாட்டின் முதுகெலும்பு என சிறப்பிக்கப்பட்ட விவசாயமும் அதன்வழி வழங்கி வந்த பசுமைப்புரட்சி பால்புரட்சி போன்றவற்றால் தன்னிறைவுப் பொருளாதாரம் என்ற நிலையை எட்டுவதற்கு நாம் எல்லோரும் முனைப்புடன் முன்வருதல் வேண்டும். உலகமயமாக்கலும் அதன் வழி மேம்படுத்த முயல்கின்ற தொழிற்புரட்சியும் நாட்டின் உலகின் சூழலியல் அமைப்புகளைச் சிதைக்காத வகையில் அமைய வேண்டும் என்பதில் உறுப்பாடு கொள்தல் வேண்டும். அவசியத் தேவைகளுக்கு அல்லாத ஆடம்பரத் தேவைகளுக்கு எபொருளை வீணடிப்பதும் மண்வள ஆதாரங்களை அதிகமாக நுகர்வதும் குறைத்துக்கொள்ள பழகவேண்டும். பொறியியல் படித்து, முனைவர் பட்டம் வென்று பிணவறை காவலர் தேர்வுக்கு வரிசைக்கட்டி நிற்கும் இளைஞர்கள் தங்களின் மனப்போக்கை மாற்ற வேண்டும். உழவுக்களம் நோக்கி நடைபோட வேண்டும். தனிமனித மன மாற்றம் நிகழாத வரையிலும் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு பிறக்கப் போவதில்லை. எனவே நாம் வாழும் ஊர், நாடு, நகரம், உலகம், பிரபஞ்சம் ஆகிய இவற்றுள் வாழ்வதற்கு நமக்கு எந்த அளவு உரிமையுண்டோ அதே அளவு நம் அடுத்த சந்ததியினர்க்கும் உரிமை உண்டு என்பதை உணர்ந்து செயல்படுவோம். தனிமனித நடத்தை மாற்றமே சூழலியல் மேம்பாடுக்கு வழிவகுக்கும் என்ற உயரிய கருத்தை கவிஞர் வைரமுத்து எழுதிய மூன்றாம் உலகப்போர் புதினம் உணர்த்துகின்றது என்பது இந்த ஆய்வின் உறுதிப்பாடாக அமைகின்றது.

## References

Vairamuthu, (2012) Moondram Ulaga Por, Surya Pathippagam, Chennai, India.

Kumarasamy, K., (2011) Sutru Sulal Ariviyal, Bharathidasan University, Tiruchy, India.

Krishnamoorthy, S., (2004) ariviyal tamil udagangal, All India Science Tamil Kazhagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License